**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.213/2025</u>**

**<u>நாள் : 23.06.2026</u>**

**எ.ம.சா.** 1 (3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மருதாச்சலம் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கோவிந்தராஜ் | வயது | : | 33 |
| ஊர் | : | திருப்பத்தூர் | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**<u>முதல் விசாரணை</u>**

நான் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். அழைப்பாணை கிடைக்கப்பெற்று அனுமதி கடிதத்துடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அனுமதி கடிதம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்கிறேன். TN 83 S 0334 என்ற டிரக்டரை குரிசிலாபட்டு காவல்நியைத்தார் ஆய்வுக்கு 21.02.2023 அன்று கொண்டு வந்தனர். இந்த டிரக்டரின் உரிமையாளர் ஜெயந்தி க/பெ கோவிந்தராஜ். பதிவு சான்றிதழ் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்கிறேன். டிரக்டரின் ஓட்டுநர் பெயர் தினேஷ்குமார். அவரின் ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கப்படவில்லை. டிரக்டருடன் இணைக்கப்பட்டுள்ள டிரைலர் பதிவு செய்யபடவில்லை. டிரக்டர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்த காப்பீட்டு சான்று எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்கிறேன். இந்த வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை எ.ம.சா.4 ஆக குறியீடு செய்கிறேன். ஓட்டுநர் உரிமம் இல்லாதவர் சாலையில் வாகனத்தை

இயக்க தடை செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாத டிரைலரை இணைத்து இயக்க முடியுமா என்றால் கூடாது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஓம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.